# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 2.] பிப்ரவரி மீ 1888. [புஸ்த. XIX.


CONTENTS.


The Industrial Arts and the Educated Hindus.............. 25

Truthfulness is natural to Man and is an indispensable Element of Society (*Continued*) 31

Wisdom is all-powerful.......... 34

Anger and its serious Effects... 38

Paper Manufacture in India.... 43


அட்டவணை.


கைத்தொழில்களும் கல்விபயின்ற இந்துக்களும்.......................... 25

வாய்மை மனிதனுக்கு இயல்பான குணமென்பதும், ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாததென்பதும். (தொடர்ச்சி).................. 31

விவேகத்தினாலாகாததில்லை............ 34

கோபமும் அதனாலாகிய தீமைகளும். 38

இந்தியாவில் காகிதஞ்செய்வது....... 43



MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

# ஜநவிநோதிநி.

இல. 2.] பிப்ரவரி மீ 1888. [புஸ்த. XIX.


## கைத்தொழில்களும் கல்விபயின்ற இந்துக்களும்.

கைத்தொழில்கள் மனிதனுக்கு அத்தியாவசியமானவை. உலகத்தில் அதிக மிலேச்சத்தன்மை பெற்றவர்களுக்கும் நாகரீக மடைந்தவர்களுக்கும் அத்தொழில்கள் இன்றியமையாதன. ஒருவன் எவ்வகைப்பட்ட சம்பத்துடையவனா யிருக்கினும், கல்விமானா யிருக்கினும், அவனைப் பசி, தாகம், குளிர், முதலியவை பீடிக்காமல் விட்டகலா. இவற்றை நிவர்த்தித்துக்கொள்ள மனிதனுக்குக் கைத்தொழில்கள் அத்தியாவசியமானவை. சகல ஜீவராசிகளிலும் மனிதன் இயற்கையில் ஆதரவற்றவனென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். பிற உயிர்கள் தம்மை வருத்தும்போது தமக்குப் பாதுகாப்பாயிருக்கும்படி கொம்பு முதலிய கருவிகளையும், குளிர்-வெய்யில்-மழை முதலியவற்றால் சங்கடம் நேரிடாதபடி சருமம்-உரோமம்-இறகு முதலியவைகளையும் விலங்காதிகளுக்குக் கடவுள் அமைத்திருப்பதுபோல் மனிதனுக்கு அவர் யாதொன்றும் அமைத்து வைக்கவில்லை; ஆகவே புறத்துறுப்பின் லக்ஷணத்தை ஆராய்ந்து பார்க்கையில் எல்லாப்பிராணிகளிலும் மனிதன் மிகவும் ஆதரவற்றவனென்று தெரியவருகிறது. ஆகையால் மனிதன் தன்னுடைய பாதுகாப்புக்காக வேண்டிய சகல அம்சங்களையும் தன்னுடைய விவேகத்தைக் கொண்டு கரசரணாதி அவயவங்களைத் தக்கபடி உபயோகித்துக் கொள்ளவேண்டியதென்பதே கடவுளின் கருத்தென்பதற்கு ஐயமில்லை. ஏனைய பிராணிகளுக்குப் பகுத்தறிவு என்னும் அருங் குணத்தைக் கடவுள் அமைத்து வைத்திலராதலின், அவை தம் பாதுகாப்புக்காக வேண்டியன இன்னின்னவென்பதை உணரச் சக்தியற்றிருக்கிறபடியினாலே அவைகளுக்கு இயற்கையில் அத்தகைய கருவிகளை ஈஸ்வரன் அமைத்து வைப்பது நியாயந்தானே? தனக்கு வேண்டியவற்றை உணர்த்தி அவற்

றைச் சவதரித்துக் கொள்வதற்கான வகையைக் காட்டத்தக்க பகுத்
தறிவைக் கொடுக்கப் பெற்ற மனிதனுக்கு அப்படிப்பட்ட கருவிகளை
இயற்கையில் கடவுள் அமைத்து வைப்பது அனாவசியந் தானே?
மேற்காட்டப்பட்ட நியாயங்களினால், மனிதன் தன் பகுத்தறிவைக்
கொண்டு கரசரணாதி அவயவங்களினாலே வேலைசெய்வது எவ்வளவும்
அவனுடைய கவுரவத்துக்கு ஹானியைத் தரத்தக்கதல்ல வென்பதை
யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டிவரும். இவ்வுண்மையை உணரப்பெ
றாதசிலர் மெய்வருந்தி வேலைசெய்யும் உழவர்கள் முதலிய தொழிலாளி
களை அலட்சியம் பண்ணுகிறார்கள். மெய்வருந்தி உழைத்து வேலைசெய்
வதினால் அல்லவா கரம்பான காடுகளெல்லாம் சிங்காரத் தோட்டங்க
ளாகத் திருந்தி ரமணீகரமாகின்றன? உழவுத் தொழிலினாலல்லவா நம
க்குப் பிராணாதாரமாயிருக்கும் நெல், கோதுமை, முதலிய சகல தானி
யங்களும் விளைந்து களஞ்சியத்தில் வந்து சேருகின்றன? உழைப்பி
னாலல்லவா காட்டிலுள்ள பஞ்சும் ஆட்டின்மீதிலுள்ள மயிரும் பட்டு
ப்பூச்சிகள் தரும் பட்டும் திவ்வியமான ஆடைகளாகவும் கம்பளங்க
ளாகவும் மெத்தைகளாகவும் அரசன்முதல் யாவருக்கும் உபயோகமா
கிவருகின்றன? பொடிப் பொடியாய் உதவியற்றிருக்கும் அற்பப் பு
ழுதிகள் திண்ணிய செங்கற்களாவதும், அரசன் கொலுவீற்றிருக்கத்
தக்க மாடமாளிகை கூடகோபுரங்களாக அமைவதும் உழைப்பினாலல்
லவா? புழுதிமயமாயிருக்கத்தக்க பஞ்ச உலோகங்களும்வெளிப்பட்டுத்
தம் நிஜ சொரூபத்தோடு பற்பல எந்திரங்களாவதும் நாணயங்களாவ
தும் ஒளிவீசும் ஆபரணங்களாவதும் உழைப்பினாலல்லவா? ஆரணியங்
களிலுள்ள விருட்சங்கள் நாம் கடல்மார்க்கமாய் உலகெங்கும் உலவுவத
ற்கான நாவாய்களாய் அமைவதற்கு உழைப்பல்லவா காரணம்? மனி
தன் மெய்வருந்தி வேலைசெய்வதினால் ஆகாதகாரியமும் உண்டோ?
மஹாவிருட்சங்களையும் பட்டணங்களையும் அழித்துக்கொண்டு வரும்
மகத்தாகிய நதிகளைப் பாலங்கள் மூலமாய் மனிதன் கடக்கக் கூடியவ
னாயிருப்பதற்கும், காற்றும் நுழைவதற் கிடமிராத பர்வதங்களை அவ
ன் ஊடுருவிக்கடப்பதற்கும் காரணமா யுள்ளதெது? உழைப்பன்றோ?
பிரிதிவு, அப்பு, தேயு, வாய்வு, ஆகாசம் என்னும் ஐம்பூதங்களும் மனி
தனுக்கு ஆட்பட்டு அவனுடைய குற்றேவல்களைச் செய்து வருகின்
றன அல்லவா? பிராணாதாரத்துக்கு அத்தியாவசியமாய் வேண்டிய
காற்று நுழைவதற்கிடமிராத பூமியின் அடிப்புறத்தில் சென்று உலோ

கங்களிருக்கும் கனிகளைச் சோதிப்பதும், பெருநதி-சமு
றிற்கு அடிப்புறமாகப் பிராண ஹானியின்றி ஜனங்கள் பு
தொடரிலேறி ஒருநொடியிற்போவதும், சமுத்திரத்தின் அ
லுள்ள முத்து முதலிய நவரத்தினங்களையும் வாரிக் கொ
குவிப்பதும், பர்வதாகாரமான புகைவண்டிமுதலிய எந்திரங்களை நீராவி இயக்குவதும், ககனமார்க்கமாய் ஒருகாண்டத்திலிருந்து மற்றொரு காண்டத்துக்குப் புகைக்கூடு மூலமாய்ப் போவதும் எதனால்? எல்லாம் உழைப்பினால்தான். பிராணனுக்குப் பெருந்திங்கு விளைக்கத்தக்க கொடிய விஷம் அப்பிராணனைக் காப்பதற்கான சஞ்சிவிபோன்ற ஔஷதமானது எதனால் ? உலகத்தில் உதவியற்றதாகத்தோன்றுகிற புல், பூண்டு, சருகு, மலம், சாக்கடைஜலம் முதலிய யாவும் மனிதனுடைய ஜீவாதாரத்துக்கேற்ற வஸ்துக்களாக்கப் படுவது எதனால் ? உழைப்பினாலே தான். பஞ்ச பூதங்களினிடத்தும் சர்வஜீவதயாபரன் ஆன்மாக்களின் உபயோகத்துக்காக அமைத்து வைத்திருக்கும் அளவிறந்த பயன்களுக்குள் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினனாகிய மானிடன் இப்போது அடைந்து வரும் பயன்கள் மிகச் சொற்பமானவைகளே. இன்னும் நாம் அறிந்து அனுபவிக்கவேண்டிய பயன்கள் யாவற்றையும் நமக்குச் சித்திபெறச் செய்வதற்கு உழைப்பென்னுங் கருவியேயன்றி வேறு சாதகம் திரிகாலத்தும் கிடையாது.

விவேக விளக்கமில்லாத சாதாரண ஜனங்கள் மெய்வருந்தி வேலைசெய்வதைக் காட்டினும் கல்வி தேர்ச்சியினால் அறிவு விளக்கம்பெற்றவர்கள் அந்தப்படி வேலைசெய்யத் தலைப்படுவார்களாகில் அவர்களுக்கும் அவர்கள் தேசத்தாருக்கும் பெருத்தநன்மை விளையுமென்பதற்கு ஐயமில்லை. கல்வி பயின்ற ஒவ்வொருவரும் நியாயவாதி-நியாயாதிபதிமுதலிய உத்தியோகங்களையே நாடித்திரிவாராகில் பிராணாதாரத்துக்கும் தேகாரோக்கியத்துக்கும் இன்றியமையாதனவாகிய கைத்தொழில்வேலைகள் முதலியவை போம்வழியாது? அந்தப்படி கல்விமான்கள் கைத்தொழில் முதலியவேலைகளில் பயின்று வாராததற்குக் காரணம் அவர்கள் அவற்றின் அருமைப்பாட்டை உணராது அலட்சியம் பண்ணுவதேயாம். உலகத்திலுள்ள பற்பலதேச சரித்திரங்களையும் நாம்வாசித்துப்பார்க்கையில், எந்தத்தேசத்தவர்கள் கைத்தொழில் வேலைகளில் அயர்விலா ஊக்கத்துடன் பாடுபட்டு வருகின்றார்களோ அவர்கள் அவ்வப்பியாசம் அமையப் பெறாத தேசத்தவர்களைத் தமக்கு நாளாவர்த்

...க்தி அரசாண்டு வருகிறார்களென்று நிதரிசனமாகத் தெரிய ... நமது இந்துதேசத்தையும் இங்கிலாந்து தேசத்தையும் ...ஷயத்துக்காக உதாரணங்களாய் எடுத்துக் கொண்டு அவ் ...தசங்களேயும் ஒத்திட்டுப்பார்ப்போமாக.

அநேக நூற்றூண்டுகளுக்கு முன்னர் உலகத்திலுள்ள ஏனைய எல்லாத்தேசங்களும் ஒளிமழுங்கி அங்குள்ள ஜனங்கள் நாகரீகம் அற்றவர்களாயிருந்தபோது இந்துக்கள் நெய்தற்றொழில், சிற்பவேலை, விவசாயம், முதலியவற்றில் சிறந்திருந்ததாகவும், அதனுல் நமது தேசம் குன்றிலிட்ட சுடர்விளக்கைப்போல் நாற்புறமும் ஒளிவீசியதென்றும், அதுகாரணமாகப் புறத்தேசத்தவர்கள் இத்தேசத்திலுள்ள அளவிறந்த செல்வத்தைக் கவரும் நிமித்தம் அடிக்கடி படையெடுத்து வந்தனரென்றும் சரித்திர பூர்வமாய் நாம் அறிகிறோம். ஒருகாலத்தில் உலகமுழுவதும் தனியரசு புரிந்துவந்தவர்கள் உரோமர்களென்றும், அவர்களுடைய ராஜதானிப்பட்டணம் உரோமாபுரியென்றும், அவர்களுக்குச் சக்கிரவர்த்தியாயிருந்தவர் ஜூலியஸ் சீஸர் என்றும், அவர் கொலுவீற்றிருக்கையில் தம்முடைய தேகம் அணிபெறத் தரித்துக்கொண்ட அங்கிக்கு அழகுதந்தது நமது இந்துதேசத்துச் சரிகையே என்றும் புராதன உரோமசரித்திர கிரந்தகர்த்தர் ஒருவர் வியந்து கூறுகின்றார். இவ்வளவு பெருமையுடன் விளங்கிய இந்துதேசம் இப்போது ஒளிமழுங்கி வேற்றரசருடைய நகைப்புக்கு இலக்காய் நிற்பது யாது காரணத்தினல்? கல்விகற்கப் புகுந்தவர்கள் மெய்வருந்தி வேலைசெய்யவேண்டிய உழவுமுதலிய தொழில்களை அவமான மானவைகளென்று திரஸ்காரம்பண்ணி உத்தியோகமென்னும் சேவகத்தையே பெரும்பொருளாக வியந்துவருவதே அதற்குக்காரணம்.

பன்னிரண்டாம் நூற்றூண்டு ஆரம்பத்தில் ஒன்றுக்கும் உதவாததாய்க் கேவலம் ஏழ்மையான ஸ்திதியிலிருந்த இங்கிலாந்து தேசம் இளம் பிறைபோல் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய் வளர்ந்து சோடசகலைகளுடன் இப்போது எங்கும் ஒளிவீசி நிற்கின்றதல்லவா? நாமும் நமது தேசமும் அபிவிருத்திக்காக அச்சிர்மையின் தண்ணளியையன்றோ எதிர்பார்க்கின்றோம்? இந்த நிலைமைக்கு அந்தத் தேசம் வந்தது வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றில் சிறந்ததினுலல்லவா? அறுநூறு வருஷத்திற் குள்ளாக அந்தத் தேசம் அடைந்த அபிவிருத்தி ஒன்றே-கைத்தொழிலினுல் ஒரு தேசத்துக்கு

விளையும் நன்மையின் பெருக்கத்துக்குச் சாட்சி பகரத்தக்கதாயிருக்கின்றது. இந்து தேசவாசிகளாகிய நாம் இப்போது உடுக்கும் ஆடைகளுக்காகவும், எழுதும் காகிதங்களுக்காகவும், உபயோகிக்கும் மற்றும் பற்பல பொருள்களுக்காகவும் வேண்டிய சகலமூலவஸ்துக்களும் நமது தேசத்தில் நாற்புறமும் வீழ்ந்துகிடக்க, அவற்றை எடுத்து உபயோகிக்கத்தெரியாமையினாலும் உபயோகிப்பது அகௌரவமென்று நம்முள் சிலர் நினைக்கின்றபடியினாலும் அவற்றிற்கெல்லாம், புயலென்னும் வாரிவளத்தை ஏக்கத்தோடு பார்த்திருக்கும் பைங்கூழ்போல் நமதுதேசம் இங்கிலாந்தின் வள்ளற்றன்மையை எதிர்பார்த்து வாடிநிற்கின்றது. இவ்வுண்மையை யறிந்து துயரப்படாத விவேகியும் உண்டா?

இந்தியாவில் இப்போது சர்வகலாசாலைகளிலும் ஏனைய வித்தியாசாலைகளிலும் கல்விபயின்றுவரும் சிறுவர்கள் ஆகாயத்தில் ஊனக்கண்ணுக்குப் புலப்படாத நட்சத்திரங்களின் இயக்கத்தைப்பற்றிக் கணக்கிடவும், மானதபதார்த்தசொரூபலட்சண சாஸ்திரங்களின் உண்மைகளை எளிதில் அறியவும் வல்ல மஹா பண்டிதோத்தமர்களாயிருந்தும் ஒருவனிடத்தில் சேவகம் செய்தல் என்னும் உத்தியோகம் ஒன்றைப் பெறுதற்கரிய பேறென்று நினைத்து மதிமயங்கித் தங்களுடைய ஸ்வயேச்சைக்கும் தேசத்தின்க்ஷேமத்துக்கும் ஏற்றதானவிவசாயம்-கைத்தொழில்முதலிய வேலைகளை அலட்சியஞ்செய்து வருகிறார்கள். புருஷலட்சணத்துக்குரிய வேறே எந்த வேலைக்கும் உதவாதவன் தான் சேவகமென்னும் உத்தியோகத்தை நாடுகிறவனென்றும், ஏனைய வர்த்தகம்-விவசாயம் கைத்தொழில் முதலிய வற்றைக் கையாண்டு வருபவனே புருஷலட்சண முடையவனென்றும் ஆங்கிலேயர்கள் அபிப்பிராயங்கொள்ளுகிறார்கள். நம்மவர்களோ அதற்கு நேர்மாறான அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இது தான் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமுள்ள பெருத்த வித்தியாசம். கூடியவரையில் பங்காளத்தவர்கள் ஸ்வயேச்சையான வாழ்க்கையையே விரும்புகிறார்கள். இங்கிலாந்தின் பெருமையையும் இந்தியாவின் சிறுமையையும் தற்காலத்தில் பிரத்தியட்சமாய்க் காண்பவர்களுக்கு மேலைய இரண்டு அபிப்பிராயங்களுக்குள் சரியானது இன்னதென்பது தானே தெளிவாய் விளங்கும். இந்தியாவுக்குத் தேவையானவை என்னும் தலைப்பெயர் சூட்டிய தமது புத்தகத்தில், டாக்ட்டர் மார்டாக் என்கிறதுரைஎழுதுகிறதாவது:—

"இந்தியாவில் கைத்தொழில் வேலை திரஸ்காரம் செய்யப்பட்டு வருகிறது. இறகையும் மையையும் கொண்டு எழுதிச் சேவிப்பதென்னும் உல்லாசமான உத்தியோகத்திலமர்ந்திருப்பதே புருஷலட்சணத்துக்குரித்தானதும் மனிதன் அவாவுதற்கேற்றதுமான தொழிலென்று சிறுவர்கள் நினைக்கிறார்கள். கிளாட்ஸ்ட்டன் என்கிற சீமானும் இந்தப்படியே அபிப்பிராயங் கொள்ளுகிறார். போஜனத்துக்கு வேண்டிய பண்டங்கள், உடுப்பதற்காகவேண்டிய ஆடை முதலியவைகள், வெய்யில்-மழை முதலியவற்றால் தேகத்துக்கு உபாதை உண்டாகாதபடி பாதுகாப்பாயிருப்பதற்குத்தக்க வீடுமுதலியவைகள், ஆகியஇவற்றின் விஷயமாய் இந்துதேசத்தில் பெரும்பாலும் கல்விமான்களுடைய நிலைமை எப்படியிருக்கிறதென்றால், அவற்றை வேறே எவராவது சேகரித்துக் கொடுத்தால் தாங்கள் நோவாமல் அனுபவிக்கத்தக்கவர்களாக மாத்திரம் இருக்கிறார்களேயொழியத் தாங்களே மெய்வருந்தி அவற்றை உற்பத்தி செய்யத்தக்கவர்களாயில்லை. ஆங்கிலேயபாஷையில் நன்றாய்க் கல்விபயின்றும் அநேகர் சோம்பேறிகளாய் நமக்குப்பிழைப்பெப்படிஎன்றுஏக்கங்கொண்டிருப்பதைக்காண அதிக வியசனகாமாயிருக்கிறது. கைத்தொழில்-விவசாயம்-வர்த்தகம் முதலியவற்றில் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் பழகிவருகிறபடியினால்தான் இங்கிலாந்துதேசம் அபிவிருத்தியடைந்துசிர்மை என்னும் பெயர்பெற்றது. இந்துக்கள் அவற்றை அறவேவைகவிட்டதே அவர்களுடைய க்ஷீணத்துக்கு முக்கியகாரணம்."

ஆகையால் இந்துதேசத்தில் கல்விமான்களாயிருக்கும் கனவான்களும் ஏனையோரும் தேசாபிமானம் பெற்றிருப்பது வாஸ்தவமாயிருந்தாலும், தங்கள் தேசம் எவ்விதத்திலும் முன்னிருந்த நிலைமைக்கு வரவேண்டுமென்னும் எண்ணங் கொண்டிருந்தாலும், பிறருடைய தயவை எதிர்பாராமல் தாமே தமக்குவேண்டிய சாதகங்களைச் சேகரித்துக் கொண்டு ஸ்வயேச்சையாய் உயிர்வாழ்வதே புருஷலட்சணமும் மானிடதருமமும் என்பதை வாஸ்தவத்திலுணர்ந்தவர்களாயிருந்தாலும் கைத்தொழில் முதலியவற்றையும், கிருஷிகன் - சிற்பி - தச்சன்-கம்மாளன்-தட்டான்முதலிய தொழிலாளிகளையும் இழிவுபடுத்தாமல் இருப்பாராக.

## வாய்மை மனிதனுக்கு இயல்பான குணமென்பதும், ஜனசமூகவாழ்க்கைக்கு இன்றியமையாத தென்பதும்.—(தொடர்ச்சி).

வாய்மை மானிடலட்சணத்துக்கேற்ற இயற்கைக் குணமென்பதற்கும், பொய்மை மானிடலட்சணத்துக்கு ஏலாதசெயற்கைக் குணமென்பதற்கும், மெய்மையைப்பேசுவது மஹா சுலபமென்பதற்கும், பொய்யுரைப்பது மஹா கஷ்டமானதென்பதற்கும் சென்ற மாதத்திய சஞ்சிகையில் சில நியாயங்களை எடுத்துக்காட்டினோம்.

வாய்மை ஜன சமூகவாழ்க்கைக்கு இன்றியமையாததென்பதற்குச் சில ஹேதுக்களை இச்சஞ்சிகையில் எடுத்துக்கூறுவோம். ஜனசமூகவாழ்க்கைக்கு வாய்மை இன்றியமையாததென்பதற்கு அநேக நியாயங்களுள. மெய்யுரைத்தலை மனிதனுடைய இயற்கைக்குணமாக ஜகதீசன் அமைத்துவைத்தா ரென்பதினாலும், மனிதன் உலகவாழ்க்கையின்பத்தை நுகருவதற்கு ஜனசமூகத்தில் சேர்ந்திருக்கவேண்டியதே கடவுளின் கருத்தென்பதினாலுமே ஜன சமூகவாழ்க்கைக்கு மெய்மை இன்றியமையாத தென்பது தெளிவாய் விளங்குகிறது. இதை அதிகமாய் விரிக்கவேண்டிய அவசியமில்லை. வண்ணான்-அம்பட்டன்-தோட்டிமுதலான கடைப்பட்டதொழிலாளிகள் நம்மினும் எத்தனையோ மடங்கு தாழ்ந்தவர்களாயும் நாம் சொற்பகூலிகொடுக்க வாங்கி ஜீவிக்கத்தக்கவர்களாயும் இருந்தபோதினும், அவர்கள் நம்மிடத்து எதார்த்தத்தைப்பேசி வேலையைச்செய்யாமற் போவார்களாகில், அவர்கள் நமக்காகச்செய்துவரும் வேலைகளையெல்லாம் நாமே செய்துகொள்ளவேண்டியதல்லவா நேரிடும்? அதனால் நமக்குண்டாகும் கஷ்ட நிஷ்டூரங்களை என்னென்றுரைப்பது? வாய்மையில்லாவிடத்து அக்கடைப்பட்டவர்களின் கூட்டுறவுஒழிவதனாலேயே நமக்கு அவ்வளவு பெருந்துன்பம் நேரிடுமானால், நம்முடன்கூடிச் சற்றேறக்குறைய ஒரே நிலைமையில் வாழ்கின்றவர்களிடத்தில் வாய்மையில்லாவிடத்து நம்வாழ்க்கை என்னாகும்? மனிதன் சில தியவிலங்காதிகளைப்போல் தனித்திருந்து உலக இன்பத்தை அடையக்கூடாதென்பதும், ஏனையோருடைய கூட்டுறவினாலேயே அந்தப்படி இன்பத்தை அடையவேண்டுமென்பதும் கர்த்தாவின்கருத்தாதலின், மனிதன் பிறருடைய கூட்டுறவுகொண்டு ஜனசமூகவாழ்க்கை நிலைத்திருக்கப் பார்ப்பதற்கு சத்தியம் என்னும் ஒருபொருளைவிடாமற் கைப்பற்றவேண்டியது. பத்துப்பெயர் ஒன்

றாகக்கூடி உலகத்தாரை வஞ்சித்துப் பொய்பேசியே ஜீவிக்கவேண்டுமென்று கட்டுப்பாடு செய்துகொண்டார்களென்று வைத்துக்கொள்வோம். அந்தப்பதின்மரும் தங்களுக்குள்ளே மெய்பேசினாலன்றி அவர்களின் சங்கம் நிலைபெறாது. அவர்களுக்குள் ஒருவனை ஒருவன் வஞ்சிக்கப்பொய்பேசுவானாகில் அவர்களின் கட்டுப்பாடுகெட்டு அச்சங்கத்தின்கருத்து நிலை குலைந்தழியும். பொய்யர் பதின்மர்சேர்ந்த அச்சிறுசங்கம் நிலைத்திருப்பதற்கும் வாய்மை அத்தியாவசியமாயின் ஜனசமூகவாழ்க்கை நிலைத்திருப்பதற்கு வாய்மை இன்றியமையாததென்பது சொல்லாமே அமையும். இக்கருத்தைக்கொண்டே, உலகமுய்ய அவதாரஞ்செய்த அரிச்சந்திரன்முதலிய செந்நெறிச் செல்வர்கள்

"இம்மையம்மை வீடெனமறை புலங்கொளவியம்பும்
மும்மையுந் தருமுறையுடைத்தெனா நிலைமுரணி
எம்மையாழ் வயிற்றடக்கி மீட்டுமிழ்கலாவெரிவாய்
வெம்மைகூர்நரகுய்க்கினு மெய்ம்மையைவிடேமால்."

என்று கூறி நம்மனோர் ஈடேறுவதற்கான நன்னெறியிஃதெனக் காட்டினார்கள். எந்தத்தேசத்தவர்கள் பொய்பேசுதலைப்பெருத்த அவமானமாகிய செய்கையாய் மதிக்கவில்லையோ அந்தத் தேசத்தவர்கள் நாளாவர்த்தியில் தம்முடைய வல்லமைகெட்டுத் தமது ஸ்வயேச்சை முற்றுமேகுன்றி, மெய்பேசுவதையே பெரும் விரதமாகக்கொள்ளும் மற்றொரு தேசத்தவர்களுக்கு ஐக்கியப்பட்டு அடிமைகளாவார்களென்று ஒரு சிறந்த மனோதத்துவலட்சண சாஸ்திரியார் கூறுகிறார். மெய்யைப்பேசி அதனாலுண்டாகும் துன்பங்களுக்குப்பின்னிடாத மனோதைரிய மற்றவர்களே மனங்கூசாது பொய்பேசத் துணிகின்றவர்களானபடியாலும், எதுவரினும் வருக, எதுபோகினும்போக என்னும் திடசித்தத்துடன் மெய்யைப்பேசப் பின்னிடாதவர்கள் மனோதைரியம் பூரணமாயமைப்பெற்றவர்களானபடியாலும், மனோதைரியமொன்றே ஒரு தேசத்தைக் கைப்பற்றுவதற்கும் மனோதைரியமின்மையே ஒரு தேசத்தை யிழப்பதற்கும் காரணமாயிருக்கிறபடியாலும், மேற்கண்ட மனோதத்துவ சாஸ்திரியார் அந்தப்படி அபிப்பிராயங் கொள்ளலாயினார். ஆங்கிலேயர்களுக்குள்ளே பொய்யன் என்னும் சொல் வசைச்சொற்கள் யாவற்றினும் அக்கிரகண்ணியமாய் இருக்கின்றதென்று அவர்களின் நடையுடை பாவனைகளைக்காட்டும் சரித்திரங்கள் - கிரந்தங்கள் முதலியவற்றால் தெளிவாய் விளங்குகின்றது. இவ்வொன்றே அவர்கள் மனோதைரியம் பெற்றவர்கள் என்பதற்குச் சாட்சிபகரத்

தக்கது. ஆகையால் "பிரிட்டன் தேசத்தைச்சேர்ந்த பிரதேசங்களில் சூரியன் ஒருபோதும் அஸ்தமிக்கிறதில்லை." என்கிற புகழை மனோதை ரியம் பெற்ற ஆங்கிலேயர் பெற்றனரென்பதும் ஒருவியப்போ? உல கத்தில் மஹாசுத்தவீரர்கள் என்று பெயர்பெற்ற பராக்கிரம சிலர்கள் பொய்யைமறந்தும் பேசியதில்லை என்று இந்தியா - இங்கிலாந்து - ஜெர் மனி-ஸ்காட்லாண்டுமுதலிய தேசசரித்திரங்களால் தெரியவருகிறது.

"பொய்யாமை பொய்யாமையாற்றினறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

பொய்பேசாமையாகிய ஒரு விரதத்தையே ஒருவன் இடைவிடாது அநுசரித்துக்கொண்டுவருவானாயின் வேறுதருமத்தை அவன் எவ்வ ளவும் செய்யாதிருத்தலே நன்று என்று பொருள்படத்தெய்வப்புலவர் கூறிய அமுதவாக்கை ஆழ்ந்துபார்க்கையில், பல அறங்களையும் மேற் கொண்டுசெய்வது ஒருவனுக்குச் சாத்தியமாகாதென்பதும், அந்தப் படிசெய்ய முயலுகையில் சில தவறுமாயின் குற்றம் நேரிடுமென்ப தும், பிற அறங்களெல்லாம் தரும்பயனை வாய்மை என்னும் ஒன்றே தாவல்லதென்பதும், அவ்வொரு அறத்தை ஒருவன் குறைவறச் செய்துமுடித்தலே அவன் ஈடேறுவதற்குப் போதுமானதென்பதும் அவருடைய கருத்தென்று தெளிவாய் விளங்குகிறது.

"வாய்மையெனப்படுவதியாதெனின் யாதொன்றுந்
தீமையிலாதசொலல்."

யாதொரு தீமையையும் எவருக்கும் தாாதிருப்பதாகியசொல் எதுவோ அதுதான் மெய்ம்மையென்றுசொல்லப்படுவது என்று பொருள்பட வும்,

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மைபயக்குமெனின்."

எவருக்கும் தீமைவிளையாமல் ஒருவருக்கு நன்மையை விளைக்குமானல் பொய்மொழியும் மெய்மொழியின் தன்மையதாகும் என்று பொருள் படவும் தெய்வப்புலவர் தமது உத்தரவேதமாகிய திருக்குறளில் கட் டளையிட்டிருக்கின்றுர். இவற்றின் உள்ளுணாவை அறியாத சிலர்தாம் மனங்கூசாது உரைக்கும்பொய்க்கு இவற்றை அடிக்கடி பிரமாணமா கக் காட்டுகின்றுர்கள். வாஸ்தவத்தில் நடந்த யாதொருசங்கதியைச் சொல்வதனுல் மொத்தத்தில் தீமைவிளையுமாகில் அது பொய்மை யின் தன்மையதென்றும், வாஸ்தவத்தில் நடந்த யாதொருசங்கதி

மைச் சொல்லாதிருப்பதனல் மொத்தத்தில் நன்மைவிளையுமாகில் அது மெய்மையென்றும் மேலே இரண்டு குறட்பாக்களாலும் தெரியவருகிறது. இன்னது "தீமையிலாதசொலல்" என்பதையும், இன்னது "புரைதீர்ந்த நன்மைபயக்கும்" என்பதையும் நிச்சயித்தறிவது திரிகால உணர்ச்சியுடைய ஞானிகளுக்கே சாத்தியமானதாகையாலும், துறவறத்தில் நிற்கும் சிலர்களுக்கு அருளுடைமை அத்தியாவசியமானபடியாலும் அவ்விரண்டு குறட்பாக்களும் அவர்களுக்கே உரியதென நாம் அறியவேண்டும். வாய்மை என்னும் அதிகாரத்தைத் துறவற இயலில் நாயனர் வைத்தபடியால் அது இல்வாழ்வானுக்குப் பொதுவகையாலும் துறவிக்குச் சிறப்புவகையாலும் சொல்லப்பட்டதென்று கொள்வதேமரபு. எவ்வகைப்பட்ட தீங்காயினும் அதை ஒருவன் செய்யத்தலைப்படும் போது அவனுக்கு அது தீங்காகத்தோன்றுமல் ஏதோ நன்மைவிளைப்பதாகவே தோன்றுகிறது மனேதத்துவ லட்சணமாகையால், எப்படிப்பட்ட பொய்யுரையும் புரைதீர்ந்த நன்மை பயப்பதாகவும் யாதொன்றும் தீமையிலாததாகவும் ஒவ்வொருவனுக்கும் தோன்றும். ஆகவே, அருள் நிறைந்து எதிர்கால உணர்ச்சியைப் பூரணமாகப்பெற்ற ஞானிகள்முதலிய துறவிகளுக்கு அக்குறட்பாக்கள் கூறப்பட்டனவன்றி அவ்வுணர்ச்சியற்ற இல்வாழ்வானுக்குக் கூறப்பட்டனவன்று.

## விவேகத்தினலாகாததில்லை.

உலகத்தில் விவேகத்தைவிட உயர்ந்தபொருள் ஒன்றுமேயில்லை. பொன் நவமணி முதலிய விலையேற்றமுள்ள சகல வஸ்துக்களும் இதற்குச் சமானமாகா. விவேகமொன்றினல் விலங்கு - பறவை-ஊர்வன-நீர்வாழ்வன முதலிய சமஸ்த ஜீவராசிகளினும் மனிதர் - மேம்பட்டு விளங்குகின்றனரே யல்லாமல் வேறென்றினலுமன்று. விவேகம் ஒன்றுமாத்திரம் இல்லாவிட்டால் ஒருவன் மனிதனகப் பிறந்தும் இம்மை மறுமைகளி லடையவேண்டிய பிரயோசனங்களை ஒரு சிறிதும் பெறமாட்டான். மின்சாரதபால், நீராவி யந்திரம் முதலான மிக்க அற்புதமான பொருள்களெல்லாம் அவற்றைக்கண்டு பிடித்தவர்களுடைய அறிவின் மேன்மையை விளக்கிக் காட்டுகின்றனவேயன்றி, அவர்களுடைய குலம் - பொருள் முதலியனவற்றைச் சிரேஷ்டமாகத் தெரிவிக்கவில்லை. ஆதலால் அறிவே பிரதான வஸ்துவன்றி

மற்றவை அவ்வளவு சிறப்புடையனவல்ல. விவேகவிளக்கம் பெற்ற வனுக்குச் சொந்ததேசமென்றும் அந்நியதேசமென்றுமில்லை. எல்லாம் சுயதேசமே. பகைவரென்றும் சிநேகரென்றும் அவனுக்கில்லை. அவன் அவரவர்களுக்குத் தக்கபடி நடந்துகொள்ளும் புத்தி சாதுரியத்தால் யாவரும் அவனுக்கு நட்பினராகவே யிருப்பர். அறிவாளனுகிய ஒருவனுடைய நட்பை யாவரும்விரும்புவர். அரசனும் அவனுடைய சிநேகத்தை அபேக்ஷித்து அவனுக்கு வேண்டியவற்றைச் சன்மானிப்பான்.

"அறிவுடையொருவனை அரசனும்விரும்பும்"

என்று பெரியோர் கூறியுள்ளனர். அறிவுடையோன் எப்படிப்பட்ட ஆபத்துவரினும் தப்பித்துக்கொள்ளுவான், யாவரையும் உபாயத்தால் வெல்லுவன். அவனைவெல்லுதற்கு ஒருவராலு முடியாது. அறிவின் கூர்மையால் ஒருவர்த்தகன் ஒரு பூதத்தையும் வென்று மிக்கபிரயோசனமடைந்தனன். அது எப்படி யென்றால்:—

ஒரு பட்டணத்தில் தனஞ்சயன் என்னும் ஒரு வர்த்தகனிருந்தனன். அவன் வழக்கமாய் இராக்காலங்களில் வெளியூர்ச் சாக்குகளைத் தானிருக்கும் பட்டணத்திற்குக் கொண்டுவந்து விற்றுவருவான். அவ்வாறு இராக்காலத்தில் சாக்குகள் கொண்டுவருபவன் தன் பட்டணத்து ஆயத்துறை வழியாய் வந்தால் சுங்கம் கொடுக்க வேண்டுமென்று எண்ணி அவ்வழி வாராமல் வேறொரு கள்ளமார்க்கமாய்ப் பட்டணத்துக்குச் சாக்குகளைக் கொண்டுபோய் வர்த்தகம் பண்ணி ஜீவனஞ் செய்துவந்தான். இவ்வாறு நெடுநாள் செய்துவருகையில் ஒருநாள் அர்த்தராத்திரியில் வெளியூரினின்றும் சாக்குகள் கொண்டு, தான்வழக்கமாக வரும் கள்ளவழியாய்ச் செல்லுகையில் அம்மார்க்கத்திலுள்ள ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தினின்றும் ஒரு பூதம் கீழேகுதித்து அவனைத் துரத்திக்கொண்டுவர அவன் காலடி புட்டத்திற் படும்படி மிகவும் விரைந்தோடியும், தலைமேலுள்ள மூட்டையின் பாரத்தாலும், பருத்துச்சரிந்த தொந்தியின் பளுவாலும் மிக்க ஆயாசமடைந்து நின்று, ஓர்சமயோசித யுக்தியால் பயமொழிந்து தைரியங்கொண்டு, பின் தொடர்ந்து துரத்திவரும் பூதத்தை நோக்கி, கல கல வென்று சிரித்துக் கைகொட்டி நீயா துரத்திவருகின்றாய்? அந்தோ! நான் தெரியாமல் வீணே கால்கள் நோக இவ்வளவுதூரம் ஓடிவந்தேனே யென்று மிகவும் அலக்ஷிய பாவமாகச்சொன்னான். அது கேட்ட பூதம் திடுக்

கிட்டு, இவன் நமக்கிரையாகத்தக்க சாமானிய மனிதன், அப்படியிருக்க, நம்மிடத்தில் சிறிதும் பயமில்லாமல் மிகவும் அலக்ஷியமாகச் சிரித்துப் பேசுகின்றானே, இதன் காரணத்தை அறிவோமென்றெண்ணி அந்த வர்த்தகனைநோக்கி, நீ என்னை வேறு யாவரென்றெண்ணித் தான் இவ்வளவு தூரம் ஓடிவந்தனையென்று கேட்க, இப்பட்டணத்திலுள்ள ஆபக்காரனென்றெண்ணி இவ்வளவுதூரம் பயந்து வந்தேனே யல்லாமல், நீ தூத்தி வருகின்றாயென்று தெரிந்தால் ஓடியும் அப்புறம் எடுத்துவைக்கமாட்டேனேயென்று அவன் சொன்னான். இதைக்கேட்டுப்பூதம் வியப்பும் பயமுங்கொண்டு அவனை நோக்கி, அந்த ஆபக்காரன் என்னிலும் மிக்க வல்லவனா? என்று கேட்டது. வர்த்தகன் அந்த ஆபக்காரனுடைய வல்லமைக்கும் கொடுமைக்கும் அளவேது? அப்படிக்கு இல்லாவிட்டால் யாருக்கும் அஞ்சா நெஞ்சமுடைய நான் இவ்வளவு திகில்கொண்டு ஓடி வருவேனா என்று மிகவும் வற்புறுத்திக் கூறினன். அப்படியானால் எனக்கு அந்த ஆபக்காரனைக் காட்டென்று பூதம் கேட்க, இப்படி வந்தால் நீ அவனைக் காணமாட்டாய், இந்தச்சாக்கை என் வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு மறுபடியும் இந்தக் கோணியைக் கொண்டுவந்தால், நான் உன்னை இந்தக் கோணிப் பையில் போட்டுக் கட்டிக்கொண்டு போகிறேன், அப்போது நீ அவனுடைய வல்லமையையும் கொடுமையையும் காண்பாயென்று அவன் கூறப் பூதமதற்கிசைந்தது. பின்பு வர்த்தகன் அந்த பூதத்தைக் கோணிப்பையிற் போட்டுக்கட்டி மூட்டைபோல் தலையில் வைத்துக்கொண்டு ஆபத்துறைவழியே செல்லுகையில், ஆபக்காரன்வந்து நீயார்? இந்த மூட்டையில் என்ன? என்று வினவவும், தனஞ்சயன் ஒன்றும் பேசாது மௌனமாய்ச் சென்றமையால் ஆபக்காரன் கோபித்துவந்து தலைமீது இருந்த மூட்டையைக் கீழே தள்ளிக் காலால் பலதரம் உருட்டி உதைத்துத் தன் கையிலுள்ள எழுத்தாணியால் பல விடங்களில் குத்திப்பார்த்து, இது என்னசாக்கென்று வர்த்தகனைக்கேட்டான். அவன் இது புளி மூட்டையென்று ஆபக்காரனிடத்தில் சொல்ல அவன் அது புளியோ அல்லவோ என்பதைக்கண்டறியும்படி பின்னும் எழுத்தாணியால் மூட்டை முழுவதும் குத்திக்குத்திப்பார்த்தான். பிறகு தனஞ்சயன் அதற்குரிய சுங்கத்தைக் கொடுத்துவிட்டு மூட்டையை எடுத்துக்கொண்டு கொஞ்சதூரம் போய் அதனை அவிழ்த்துப் பூதத்தை வெளியேவிட, அது அவனைப் பார்த்து,

அப்பா! நீ சொன்னவையாவும் உண்மையே, அந்த ஆயக்காரன் மிகக் கொடியவன், அவன் என்னை உதைத்து எழுத்தாணியால் குத்தினபடியால் என்சரீர மெல்லாம் சல்லடைக் கண்கள் போலாயிற்று, அவனை நினைத்தால் இன்னம் என் உள்ளம் நடுங்குகிறது, கர்ப்பம் கலங்குகிறது, நீ என்னைத் தூக்கிக்கொண்டு வாராமல் இன்னும் சிறிதுநேரம் அங்கு வைத்திருப்பையேயானல் நான் செத்தேபோயிருப்பேன், நீ அந்தச் சமயத்தில் செய்த நன்றிக்கு நான் என்ன கைம்மாறு உனக்குச் செய்யப் போகிறேன், எனக்குப் பிராணபிச்சை தந்த உனக்கு இம் மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் பரிசாகக் கொடுத்தாலும் அந்த நன்றிக்குச் சமானமாகாது, ஆயினும் என்னால் கூடிய உதவியேதாவது நான் செய்தலே வேண்டும், இந்த நகரத்து அரசன் மகளை நான் போய்ப்பிடித்துக் கொள்ளுகிறேன், எவ்வளவுவல்லமையுள்ள மாந்திரிகன் வந்தோட்டினுலும் போகேன், நீ வந்து ஆயக்காரன் என்று கூறியமாத்திரத்தில் விட்டுப்போவேன், நீ அரசனிடத்தில் வேண்டிய பொருள் பெற்றுச் சுகித்து வாழ்ந்திரு என்று பூதங் கூறிப்போய் அரசன் மகளைப் பிடித்துக்கொண்டது. மாந்திரிகத்தில் வல்லவர்கள் பலர்வந்து தங்களால் கூடியமட்டில் ஓட்டமுயன்றும் அது போகாமையைக்கண்டு அரசன் பெருந்துயருற்று இப்பூதத்தை ஓட்டுபவர்கட்குப் பதினுயிரம் பொன் தருகிறேனென்று பறையறைவிக்க வர்த்தகன் போய், அரசன் அனுமதியின்மேல் இராஜபுத்திரி யருகிற்சென்று ஆயக்காரன் என்னும் பெயர் கூறியமாத்திரத்தில் அப்பூதம் விட்டுப்போய்விட்டது. அதுகண்ட அரசன் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து, தான் முன் சொல்லியிருந்தபடி பதினுயிரம் பொன்னேயன்றி இன்னும் வேண்டிய பரிசுகளையும் அவனுக்குத் தந்து அனுப்பினுன். பிறகு அப்பூதம் வேருெரு அரசன்மகளைப் பிடித்துக்கொண்டது. வர்த்தகனை அவ்வரசன் பிடிக்கவே அங்கும்போய் ஆயக்காரன் என்றுசொல்ல அப்பூதம் நீ ஏனிங்கு வந்தாயென்று கோபித்துக்கேட்க, ஆயக்காரன் உன்னைத் தேடிக்கொண்டுவருகின்றுன், அது கூறும்பொருட்டு இங்குவந்தனனென்று சொல்லவே பூதங்கேட்டு, நல்லகாரியஞ்செய்தனை, இனிமேல் நானிருக்கும் இடத்தெங்கும் வாராதேயென்றுகூறி அவ்விடம்விட்டு நீங்கி மற்றொரு தேசத்தரசன் மகளைப்போய்ப் பிடித்துக்கொண்டது. வர்த்தகன் அரசனிடத்தில் மிகுந்தபொருள் பெற்றுக்கொண்டு திரும்பி

னன். சுற்றுப்பக்கங்களிலுள்ள பிரதேசங்களெங்கும் தனஞ்சயன் பூதம் ஓட்டுவதில் மஹா வல்லவனென்று பெயர் வந்தபடியால் இம் மூன்றுவது அரசனும் தன்னைப் பலவகையாலும் பீடித்தபடியாலே மறுபடியும் பூதமிருக்கும் இடத்தை நாடிச்சென்று அங்கும் ஆபக்காரன் என்னும் பெயரை அவன் கூறியபோது, பூதம் கோபாவேசங் கொண்டு, அவ்வர்த்தகனைக் கொல்லவாலும், அவன் ஆபக்காரன் இறந்துபோய்விட்டனன், அச்சுபசேதிகூற வந்தேனென்று மொழிந்தனன். பூதம் கோபந்தணிந்து இன்றோடு என் பீடையொழிந்தது. நீ இவ்வரசனிடத்தில் வேண்டிய நிதி பெற்றுக்கொண்டுபோய் வாழ்க வென்று கூறியது. அதற்கு வர்த்தகன் ஒன்று வேண்டும், நீ இனிமேல் இந்த பிராந்தியத்திலிராமல் நூறு யோசனைக் கப்புறமுள்ள யாரையாவது போய்ப் பிடித்துக்கொள்ளவேண்டியதேயன்றி அதற்குள்ளேயிருக்கும் எவரையும்பற்றி யலைக்கக்கூடாது, இது தான் நீ எனக்குச் செயற்பாலதாகிய கடைசி உதவியென்று அதைக் குறையிரக்க, அது அப்படியே ஆகட்டுமென்று கைபோட்டு வாக்குதத்தஞ்செய்து அந்தப் பிரதேசத்தை விட்டொழிந்தது. பிறகு தனஞ்சயன் திரண்டபொருள் பெற்றுக் குபேரனைப்போல் சுகித்து வாழ்ந்திருந்தனன். வர்த்தகன் தன்னறிவின் நுட்பத்தால் பொல்லாத பூதத்தினிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டது மல்லாமல் அதைக்கொண்டே பெருஞ்செல்வனுமாயினன். ஆகையால் அறிவினுஞ் சிறந்தபொருள் உலகத்தில் யாதுமில்லை. அறிவினுலாகாத காரியமும் திரிலோகத்தும் கிடையாது. ஆகவே அதை அபிவிருத்திசெய்ய ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

## கோபமும் அதனுலாகிய தீமைகளும்.

பிறர் நம்மிலும் மிக்கவராயிருக்கினும் நமக்குச் சமானமானவராயிருக்கினும் நம்மிலும் குறைந்தவராயிருக்கினும் ஒரு காரியத்தைச் செய்த விடத்து அது நம்முடைய மனதுக்கு ஒவ்வாவிட்டாலும் நமக்குத் தீங்கை விளைத்தாலும் அவர்களை அந்தக் காரியத்துக்காகத் தண்டிக்க நம்மைத் தூண்டும் துர்க்குணமே கோபம் என்று சொல்லப்படும். இந்த குணம் எப்படிப்பட்ட சத்புருஷனுக்கும் ஒரு காலத்தில் உண்டாகும் என்று மனோதத்துவலட்சண சாஸ்திரிகள் கூறுகிறார்கள். சகல உணர்ச்சிக்கும் மூலாதார ஸ்தானமாகிய மூளையி

னின்றும் பற்பல நரம்புகள் தேகமுழுவதும் வியாபித்திருக்கின்றன. இந்நரம்புகள் - ஆன்ம நிலையாகிய மூளைக்கு உணர்ச்சி உண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக் கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகளென்றும், மூளையினிடத்துண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகளென்றும் இருவகையாயுள்ளன. ஒருவன் நம்மைத் திடீரென்று தோளில் குத்தினனென்று வைத்துக்கொள்வோம். நம்மை அந்தப்படி குத்தினவனை மறுபடியும் நாம் அதேமாதிரியாய்க் குத்தவேண்டியதென்று நாம் எண்ணங்கொள்ளுவதற்கு முன்னமே அவனைக் குத்தவோ வேறே எதற்கோ வெகு சீக்கிரத்தில் நம்முடைய கையெழுகின்றது. இதற்குக் காரணம் யாது? அவன் நம்மைக் குத்திய உடனே அதிசீக்கிரத்தில் அவ்விஷயத்தை ஆன்ம நிலையாகிய மூளைக்குச் சில நரம்புகள் தெரிவிக்கின்றன. அங்கு நிகழும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் வேறே சில நரம்புகள் அதி அற்புதமான வேகத்துடன் இயங்கி நம்முடைய கரத்தைத் தூக்குகின்றன. ஸ்மரணை தப்பித் தூங்கிக்கொண்டிருக்கும் ஒருவனுடைய கரத்தை நாம் கிள்ளினல் அவன் தன்னுடைய கரத்தை உடனே மடக்கிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணங்கொள்ளாதிருந்தும் அவனுடைய கரம் உள்ளுக்கு வாங்கிக்கொள்வதையாகிலும், முன்னிருந்த நிலையிலிருந்து வேறே நிலைக்குத் திரும்புவதையாகிலும் நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம்; உணர்ச்சியுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக்கொண்டு போய்த் தெரிவிக்கும் நரம்புகள்-மூளையினிடத்துண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகள் என்னும் இருவகை நரம்புகளின் அதிவேகமான இயக்கமே மேலெடுத்துக் காட்டப்பட்டதற்குக் காரணம். ஒருவன் தன் மொழிகளினலாவது செய்கைகளினலாவது நமக்கு அருவருப்பான உணர்ச்சியை உண்டாக்குங்காலத்து உடனே அவனைத் திட்டவாகிலும் அடிக்கவாகிலும் வேறே யாதொரு தீங்கைச் செய்யவாகிலும் எழும்மன நிலைமைக்குத்தான் கோபம் என்று பெயர். மேற்கண்ட இருவகையான நரம்புகளின் இயக்கமே அதற்குக் காரணம். ஒவ்வொருவனுக்கும் அவ்விருவகையான நரம்புகளும் அமைந்திருக்கிறபடியினல் ஒவ்வொருவனுக்கும் கோபம் என்பது இயல்பில் உதிக்கத்தக்கதோர் குணமாயிருக்கிறது. இவ்விருவகையான நரம்புகளும் தாழ்ந்த ஜீவராசிகளுக்கும் அமைந்திருக்கிறபடியால் அவற்றிற்கும் கோபம் என்னும்

குணம் இயற்கையாயிருக்கிறது. இக்குணத்தை முழுவதும் போக்குவது சாத்தியமல்லாத காரியமாயிருக்கினும் ஒவ்வொருவனும்அதைத் தன்னுடைய புத்தியினால் அடக்குதல்கூடும். அந்தப்படி அடக்காது விடுவோமாயின் பெருத்த தீமைகள் நமக்கும் ஏனையோர்க்கும் சதா உண்டாய்க்கொண்டேவரும். நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் தத்தம் மனதுக்கிசைந்தவாறு பற்பல காரியங்களைச் செய்துகொண்டுவருகையில் அபிப்பிராய பேதத்தினால் நம்மனதுக்கு அவை ஒவ்வாவிடத்து நம்மிடத்தில் கோபம் பிறந்துகொண்டேயிருக்கும். அதைக் கூடுமானவரையில் அடக்க முயலவேண்டியது நம்முடையகடமை. அறுவது (முழுவதும் அற்றுப்போவது) சினம் என்று கூறாமல் ஆறுவது (தணியத்தக்கது) சினம் என்று ஒளவையார் கூறிய அருமையை யோசித்துப் பார்க்கையில், மனிதனுடைய மனோதத்துவலட்சணத்துக்குச் சினம் இயற்கையான குணமென்பதையும், அதை அறவேபோக்குவது எப்படிப்பட்டவனுக்கும் அசாத்தியமென்பதையும், அதை ஒவ்வொருவனும் தன்னுடைய மனோதிடத்தைக்கொண்டு தணிக்கவேண்டியதென்பதையும் அறிவிக்கவே அம்மாது சிரோன்மணி அங்ஙனம் கட்டளையிட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஒரு பெரியவர் ஒரு ஊரில் யார் என்ன சொன்னபோதிலும் கோபிக்கிறதேயில்லையென்று பிருது கூறிக்கொண்டிருந்தார். அதைக் கேள்வியுற்ற ஒரு அகசியக்காரன் அவரிடத்திற்சென்று, சுவாமீ! தங்களுக்கு எப்போதும் கோபம் வருகிறதேயில்லையா? என்றான். அவர் அவனைநோக்கி அதிசாந்தமாய் அப்பா! எப்போதும் வருகிறதேயில்லையென்றார். மறுபடியும் அவன் அப்படியே கேட்டான். அவர் அதற்கும் அதே மாதிரியாய் விடைபகர்ந்தார். மீண்டும் மீண்டும் முப்பது நாற்பது தரம் அவன் அதேகேள்வியைத் திருப்பித் திருப்பி மூச்சுவிடாமல் கேட்டுக்கொண்டேயிருந்தான். அப்போது அப்பெரியவர் சீ! சீ! நீ முட்டாளாயிருக்கின்றாய், எத்தனை தடவை உனக்கு நான் உத்தரவு சொல்லுகிறது? போ, என்று முகங்கடுத்துக் கூறினார். இதைக்கண்ட மாத்திரத்தில் அவன் சுவாமீ! இதோ தங்களுக்கு இப்போது கோபம் பிறந்ததே, எப்போதும் கோபிப்பதில்லையென்னும் பிரதாபம் வெட்ட வெளிச்சமாயிற்றே என்று பரிகாசம் செய்துகொண்டேபோய்விட்டான். ஆகையால் எப்படிப்பட்டவனிடத்தும் ஒரு காலத்தில் கோபம் தன்னையறியாமலே உதிக்கும். காமக்குரோதாதிகளை அறவேவிட்டொ

ழிந்த துறவிகளுக்கும் சினம் ஒவ்வொருகாலத்தில் உண்டாதலியற்கை; ஆனால் அவர்களுடைய கோபம்பிறருக்கு நன்மையையே விளைக்குமென்றும், ஆதலால் அதை மறக்கருணையென்றும் சாஸ்திரம் கூறுகிறது.

கோபம் பெரும்பாலும் மனோதிட மற்றவனுக்கும் அகங்காரிக்குமே அடிக்கடி உண்டாகும். பாலியர்களுக்கும் வயோதிகர்களுக்கும் அடிக்கடி சொற்பவிஷயங்கள் காரணமாகவும் கோபம் உண்டாகின்றதை யோசிக்கையில், கோபத்தை அடக்குவதற்கு மனோதிடமும் தேகதிடமும் அத்தியாவசிய மென்று தெரியவருகிறது. கோபம் உண்டாகும்போது மாத்திரம் அதைச்சற்றே அடக்கிவிட்டால் அதின் வேகத்துவம் வெகுசாய்க் குன்றும். ஒருவரைக் கோபிக்க மனமெழும்போது நெடுங்கணக்கை ஒருவிசை முகபாடமாகச் சொல்லிவிட்டுப் பிறகு கோபித்துக்கொள் என்று ஒரு சாஸ்திரியார் கூறுகிறார். அதை ஒருதரம் சொல்லி முடிப்பதற்குள்ளாகக் கோபம் தணிந்தேபோய்விடுமென்பது அனுவப்பிரசித்தம்.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ."
"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தா னருடனுங் கோல மாற்றினன்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே."

என்று கோபத்தால் விளையும் பெருங்கேட்டைக் குறித்து முதறிஞர் பலவாறாகக் கூறியுள்ளார். உலக சரித்திரமும் அதற்குச்சாட்சி பகரத் தக்கதாயிருக்கிறது.

ஒருவன் நமக்கு யாதொரு தீங்கான காரியத்தைச் செய்கையில் அவனை அதற்காகத் தண்டிக்க வேண்டுமென்கிற எண்ணங் கொண்டல்லவா நாம் அவனைக் கோபிக்கின்றோம்? நாம் அந்தச் சமயத்தில் கோபியாது பொறுமையுடன் சும்மா இருந்து விடுவோமாயின் நமது பொறையுடைமையே அவன் மனச்சான்றுடையவனாயிருந்தால் அவனது மனதை யறுக்கும், இது மனோதத்துவ லட்சணம். அந்தசமயத்தில் நாம் கோபித்துக் கொண்டு அவனுக்குப்பிரதிபலனாக யாதொரு தீங்கைச் செய்வோமானால் அப்போது எவ்வளவு நமக்கு மனச்

சந்துஷ்டி உண்டாகுமோ அதைவிட ஆயிரமடங்கு அதிகமாய்ப் பொறையுடைமையாற் பெருமகிழ்வு பின்புண்டாகும். இக்கருத்தை யமைத்தே,

"மிகுதியான்மிக்கவை செய்தாரைத்தாந்தந்
தகுதியான் வென்றுவிடல்." என்றும்,
"ஒறுத்தார்க்கொருநாளையின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும்புகழ்." என்றும்,

தெய்வப்புலவர் தமது தமிழ் மறையில் கூறியுளார். அன்றியும் மனிதனிடத்திலுள்ள ஒவ்வொரு துர்க்குணமும் பிறர்க்கும் தனக்கும் தீமையைத் தரத்தக்கனவா யிருக்கின்றன. அவற்றுள் சிலதனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவாகவும் மற்றும் சில பிறர்க்கே பெருத்த ஹானியைத்தரத்தக்கனவாகவும் இருக்கின்றன. இவ்விருவகைக் குணங்களுக்குள் தனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவற்றிலெல்லாம் கோபம் நடுநாயகம். ஆகையினால்தான்,

"தன்னைத்தான்காக்கிற் சினங்காக்ககாவாக்காற்
றன்னையே கொல்லுஞ்சினம்."

என்று நாயனுர் தமது உத்தரவேதத்திற் கட்டளை யிட்டிருக்கின்றனர். தன்னினும் மிக்காரிடத்தில் ஒருவன் கோபங்கொள்ளக் கூடாதென்று நாம் வற்புறுத்திக்கூற வேண்டுவதில்லை; ஏனெனில் அதனுல் வினையும் பலப்பிராப்தியே அவனுக்கு வெகுசீக்கிரத்தில் புத்திகூறத்தக்கது. ஒருவன் தன்னினும் கல்வி, செல்வம், பலம் முதலியவற்றில் குறைந்தவனிடத்துச் சினங்கொள்ளா திருத்தலே பெருமையாகும். அதுதான் பொறையுடைமைக்கு அழகு. "எல்லாமொறுக்கு மதுகை யுரனுடையாளன் பொறுக்கும் பொறையே பொறை." என்று மேலோர் கூறியிருக்கின்றார்கள்.

இவ்வளவு தீயதான ஓர்குணத்தை ஜகதீசன் மனிதனிடத்து ஏன் அமைத்து வைக்கவேண்டும்? என்னும் வினு நம் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வோர்காலத்தில் நிகழக்கூடும் அல்லவா ? லௌகிகதருமத்தை நடத்திக்கொண்டுவரும் ஒருவனிடத்தில் கோபம்முற்றுமே இல்லையென்று வைத்துக்கொள்வோம். அவன் கூட்டுறவு கொள்ளும் ஏனையோரிடத்துப்பொய்-களவு-கொலை முதலிய தீக்குணங்களிருக்கிறபடியினுல் அவற்றினின்றும் அவன் தப்பிப் பிழைப்பதற்காவது அவற்றை அவர்களிடத்தி லிராமல் ஓட்டுவதற்காவது அவனிடத்தில் சிறிது சினம்இருத்தல் அத்தியாவசியம். ஒருவன் தன்னுடைய அருமைப்புதல்

வன் தீயகாரியங்களைச் செய்யக்கண்டகாலத்து உடனே அவனைத் தண்டிக்கவேண்டியது தந்தையாகிய தன்னுடைய பெருங் கடமையல்லவா? அவனை அந்தப்படி தண்டிப்பதற்குச் சினம் சிறிது வேண்டியதல்லவா? அவனிடத்தில் சினம் முற்றுமே இல்லையானால் அப்புதல்வனைத் தண்டிக்க அவனுக்கு மனம் எழுதல் அரிது. இவ்விதமான சினத்தைத்தான் பெரியோர் மறக்கருணை என்பார். ஆகவே நடுவுநிலைமையுடனிருந்து இந்த விஷயத்தை யோசித்துப் பார்க்குமிடத்து, சினம் வரம்புகடந்து சென்றால் ஜனசமூக வாழ்க்கைக்கும் சினங் கொள்வோனுக்கும் பெருங் கேட்டைத் தருமென்றும், ஏனைய தீக்குணங்களிருக்கிற படியினால் அவற்றை அளவுகடக்க வொட்டாமைக்குச் சினம் சிறிதிருத்தல் ஜனசமூக வாழ்க்கைக்குக் கேடல்லவென்றும், எப்படிப்பட்ட சாதுவினிடத்திலும் சினம் முற்றுமே யில்லாமற் போகாதென்றும், அதைக்கூடியவரையில் தணித்துக் கொண்டே வருவதுதான் உத்தம புருஷனுடைய குணமென்றும் தெரியவருகிறது.

## இந்தியாவில் காகிதஞ்செய்வது.

நம்முடையகருத்தை நெடுந் தூரத்திலிருப்பவர்களுக்குத் தெரிவிப்பதற்கும், நமக்குப்பின் நெடுங்காலம்வரையில் உலகத்தாருக்கு நம்முடையகருத்தை அறிவிப்பதற்கும் அனுகூலமானது எழுத்தேயாம். . எழுத்துமூலமாக விவேகிகளுடைய அபிப்பிராயங்கள் ஏககாலத்தில் நாற்புறமும் பரவி யாவருக்கும் பயன்படுவதற்கு அச்சுயந்திரமே தக்க துணைக்கருவியாயிருக்கின்றது. அச்சுயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதற்குமுன் உலகத்தார் அடைந்திருந்த அபிவிருத்திக்கும், அதுகண்டு பிடித்தபின்பு அவர்களடைந்துவரும் அபிவிருத்திக்குமுள்ள பேதத்தைப் பகுத்தறிவுபெற்ற ஒவ்வொருவரும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடும். அச்சுயந்திரங்கண்டு பிடித்ததற்குமுன் அந்தந்த தேசங்களில் இங்குமங்கும் சிற்சில விவேகிகள் அத்திபூத்தது போல் தோன்றி மஹாபண்டிதர்களென்று பெயரெடுத்தார்கள். அந்தத்தேசங்களிலுள்ள ஏனையோர் அக்கல்விமான்களுடைய அற்புதமான அபிப்பிராயங்களடங்கிய கிரந்தங்களை எளிதில்வாசித்து உணருவதற்கு அச்சுயந்திரம்போன்ற தக்கதோர்கருவி அமையப்பெற்றிலாதலின் அவ்விவேகிகளுடைய கல்வியும் மதிநுட்பமும் அவர்களோடே அழிந்தன. அவற்றால் ஏனையோர் பயன் அடைந்திலர். அச்சுயந்தி

ரம் உண்டாகி அதனால் உலகத்தார் பயன்பட்டுவரும் இக்காலத்தில் நாற்புறமும் கல்விபரவுவதற்கு அனுகூலமுண்டாயிருக்கிறபடியால் சராசரியில் எல்லோருமே ஒருவாறுகக் கல்விமான்களாயிருந்து வருகிறார்கள். ஜனசமூகவாழ்க்கைக்குக் கல்வியைக் கரைகண்டுணர்ந்த மஹாபண்டிதோத்தமன் ஒருவன் இருப்பதைக்காட்டிலும் சராசரியில் எல்லோருமே அவசியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொண்டு சாதாரண கல்விமான்களாயிருப்பதே உத்தமம். ஜனங்கள் நாகரீகமடைந்து மேன்மேலும் அபிவிருத்தியாவதற்கு அச்சுயந்திரம் மேற்காட்டப்பட்ட ஹேதுவினால் தகுந்த கருவியாயிருக்கிறதென்று நிச்சயித்தபிறகு, அந்த அச்சுயந்திரமென்னும் அருமையானகருவி நன்றாய் இயங்கியாவருக்கும் பயன்படுவதற்கு இன்றியமையாததாயிருக்கிற மற்றொரு வஸ்துவைப்பற்றி யோசிக்கவேண்டியது அவசியம். அந்த வஸ்து காகித மென்பதேயாம். ஆகவே உலகத்தின் மேன்மேலுயர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மூலகாரணமாயிருப்பது காகிதமென்றே துணிந்துகூறலாம். முற்காலத்தில் ஜனங்கள் காகிதத்திற்குப் பிரதியாகப் பிராணிகளின் சருமங்களையும் சில விருட்சங்களின் பட்டைகளையும் ஓலைகளையும் உபயோகித்து வந்தார்கள்; நிரந்தரமாயிருக்கவேண்டிய சாசனங்கள் முதலியவற்றைச் சிலைகளிலும் செப்பேட்டிலும் எழுதிவந்தார்கள்.

காகிதம் உண்டாக்கும் விதத்தைப் பிரதமத்தில் கண்டுபிடித்தவர்கள் சீனதேசத்தவர்களென்று தெரியவருகிறது. ஐரோப்பாகண்டத்தில் அதை உற்பத்திசெய்யும் விதத்தைக்கண்டுபிடித்ததற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே அது சீனதேசத்தவர்களுக்குத் தெரிந்திருந்தது. அதிநுட்ப புத்தியுள்ள சீன தேசத்தவர்கள்-பஞ்சு, சணல், வைக்கோல், கம்பளிகொண்டான் அல்லது முசுக்கட்டைச் செடி-மூங்கிற்செடியின்பட்டை ஆகிய இவற்றைக்கொண்டு காகிதஞ் செய்கிறார்கள். ஜபான்தேசத்தவர்களும் காகிதம் செய்வதில் அதிக பிரசித்தியடைந்தவர்கள். அந்தத்தேசத்தில் 262 விதமான காகிதங்கள் செய்யப்பட்டுவருகின்றன. அவற்றில் அநேகம் - விசிறி, குடை, புஷ்பம், மெழுக்குவர்த்தி முதலியவற்றிற்காகவும், கைக்குட்டை, லாந்தர், முதலியவற்றிற்காகவும், தண்ணீர்படாமல் பாதுகாப்பாயிருப்பதற்கான உடைகளுக்காகவும், கயிறு திரிப்பதற்காகவும், ஐரோப்பாகண்டத்தைச் சேர்ந்த தேசங்களில் காகிதத்தைக்கொண்டு என்

னென்னவேலைகள் செய்யப்பட்டு வருகின்றனவோ அவைகள் யாவற்றிற்காகவும் உபயோகமாகிவருகின்றன. சீனதேசத்தவர்களும் ஜபான் தேசத்தவர்களும் செய்துவரும் பலவகைமாதிரியான காகிதங்கள் யாவற்றையுங்குறித்துப் பூர்த்தியாய் எழுதப்புகுந்தால் மிகவும் பெருகும்; இவ்விரண்டு தேசத்தவர்களும் காகிதம் செய்வதிலும், அதற்கு ஏற்றவஸ்துக்களைச் சேகரிப்பதிலும், அவற்றைத்தக்கபடி பொருத்தி உபயோகிப்பதிலும் யாவரும் வியக்கத்தக்க மகா நுட்பபுத்தி உடையவர்கள்.

ஐரோப்பாகாண்டத்தில் காகிதம் செய்யும் வேலையில் ஜனங்கள் பதினைன்காம் நூற்றாண்டிலே முதல் முதல் பழகத்தலைப்பட்டார்கள். 1588-ம் வருஷம் இங்கிலாந்தில் காகிதயந்திரத்தை ஜர்மன் தேசத்துக் கனவான் ஒருவர் ஏற்படுத்தினர். அதற்காக அக்காலத்து மகாராணியாயிருந்த எலிஜபத் என்னும் சீமாட்டி அவருக்கு நயிட் என்னும் பட்டம் தந்தனர்; அன்றியும் பத்துவருஷம் வரையில் காகிதம் செய்வதற்காக வேண்டிய கந்தைத்துணிகள் முதலியவற்றைச் சேகரிக்க அவருக்கே சுவதந்தரம் கொடுக்கப்பட்டது. அதுமுதல் காகிதயந்திரம் இளம்பிறைபோல் அபிவிருத்தியடைந்துவந்தது. பெரும்பாலும் கையினாலேயே பிரதமத்தில் செய்துவந்தபோது மூன்றுவாரத்தில் எவ்வளவுகாகிதம் உற்பத்தியாயிற்றோ அவ்வளவும் இப்போது யந்திர இயக்கத்தின் வேகத்தினால் மூன்று நிமிஷத்தில் உற்பத்தியாகின்றது. ஒரு நிமிஷத்தில் 25-சதுர அடியுள்ள திவ்வியமானகாகிதத்தைச் செய்துவிடலாம்; எனவே பத்துமணி நேரத்துக்குள் 15,000 சதுர அடியுள்ள காகிதத்தை உற்பத்திசெய்யலாம். காகிதமோ ஒரு அங்குலத்தில் ஆயிரத்தில் ஒருபகுதி எவ்வளவோ அதிலும் மிகக்குறைந்தகனமும் இல்லாத அவ்வளவு சன்னமாகவும் இருக்கக்கூடும்.

இங்கிலாந்துதேசத்தில் காகிதம் செய்வதற்காகக் கிழிந்துபோய் எறிந்துவிடப்பட்ட கந்தைகளையே வர்த்தகர்கள் முக்கியமாய் உபயோகித்து வருகிறார்கள். இந்தவேலைக்கன்றி அந்தக்கந்தைகள் மற்றொன்றுக்கும் உதவியில்லை. உதவியற்றதென்று நாம் நினைத்துக்கொண்டிருக்கும் வஸ்துவும் உதவியாகிறதல்லவா? ஆகையால் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட தாவரசங்கம வஸ்துக்களுக்குள் எவ்வளவு அற்பமானதையும் நாம் திரஸ்கரிக்கலாகாது. யாவற்றையும் கடவுள் பெருத்த நன்மைக்காகத்தான் சிருஷ்டிசெய்திருக்கிறார் என்பதற்கு வேறு பிரமாணமும் வேண்டுமோ? காகிதம் செய்வதற்காக வருஷந்தோறும் இங்கிலாந்துதேசத்துக்கு 150,000டன் எடை கந்தைத்துணி வேண்டியதாயிருக்கிறது. இதை ஏனையதேசங்களிலிருந்து அந்ததேசத்தவர்கள் ஏற்றுமதி செய்துகொள்ளுகிறார்கள். சில வருஷங்களுக்குமுன்னர் குதிரை

லத்தியினால் செய்யப்பட்ட ஓர்வித காகிதத்தைக்கொண்டு ஸ்வீடன் தேசத்தில் சமாச்சாரபத்திரிகை ஒன்று அச்சிடப்பட்டுவந்தது. அமெரிகா கண்டத்தில் தக்ஷணபாகத்தாருக்கும் உத்தரபாகத்தாருக்கும் யுத்தம் நேரிட்டிருந்தபோது கந்தைத்துணி அகப்படாமற்போன சமயத்திலே வேறு என்னென்ன வஸ்துக்களைக்கொண்டு காகிதத்தைச் செய்யக்கூடுமென்று விவேகிகள் வெகுசாய் ஆராய்ச்சி செய்யத்தொடங்கினார்கள். மரத்தைக்கொண்டும் காகிதம் செய்யப்பட்டுவந்தது. மரத்தைக்கொண்டு காகிதத்தைச் செய்வதில் அதிக பிரசித்தியடைந்தவர்கள் அமெரிகாதேசத்தில் ஓர் கம்பெனியார். கிரேட்பிரட்டன்-அயர்லாண்டு ஆகிய இவ்விரண்டு ஐக்கியப்பிரதேசங்களிலும் 1873-ம்வருஷத்தில் 812க்கு அதிகமாய்க் காகிதயந்திரசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்த சாலைகளுக்குள் ஒன்றில் உதவியற்ற கந்தைத்துணிகளைக்கொண்டு சராசரியில் நாளொன்றுக்கு நாற்பதுமயில் நீளமும் ஐந்து அடிக்கு அதிகப்பட்ட அகலமுமுள்ளகாகிதம் செய்யப்பட்டுவருகிற அருமைப்பாட்டை யோசித்துப்பார்க்கையில், சீர்மையிலே காகித யந்திரங்கள் இயங்கும் அற்புதக் காட்சியைக்குறித்தும் அதனால்விளையும் பயனைக்குறித்தும் என்னென்றுகூறுவது?

இந்துதேசத்தில் குடிஜனங்கள் விஸ்தாரமாயிருக்கிறார்கள். அவர்கள் நாள்தோறும் தத்தம் புறக்கடைகளிலும் குப்பைத்தொட்டிகளிலும் வீதிகளிலும் ஜலதாரைகளிலும் உதவியற்றதென்று எறிந்துவிடும் கந்தைத்துணிகளுக்கு அளவுகிடையாது. அவைகளெல்லாம் தேசக்ஷேமத்துக்கும் விவேக அபிவிருத்திக்கும் மூலாதாரமான கல்வியை நாற்புறமும் பரவும்படிசெய்வதற்கு இன்றியமையாததாயிருக்கும் காகிதத்தைச்செய்வதற்கு அதிக உபயோகமானவைகள். இந்தவிஷயத்தை நம்மனோர் நெடுங்காலம் வரையில் அறிந்துகொள்ளாமல் அல்லல்படுவது-வெண்ணெயைவைத்துக்கொண்டு நெய்க்கும், நதியில் நின்றுகொண்டு தண்ணீருக்கும் எக்கங்கொள்வதையொக்கும். கந்தைத்துணி ஒன்றுதானா? காகிதஞ்செய்வதற்கு உபயோகமாகத்தக்க மற்றும் அளவிறந்த வஸ்துக்களும் இந்தியாவில் எராளமாய் நாற்புறமும் எடுப்பாரின்றிக் கிடக்கின்றன. ஐரோப்பியர்கள் தங்களுடைய நுட்பமதியைக்கொண்டு பற்பல பண்டங்களைச்சேகரித்து யந்திரங்கள் சகிதமாய் விலை சரசமாகக் காகிதம்செய்வதற்காக வேண்டிய யந்திரசாலைகளை எற்படுத்திச் சொற்பசெலவிலே அதிக பிரயாசையில்லாமல் தாங்களும் உலகத்தாரும் பயனடைந்து சுகித்தற்கு வேண்டியகாரியங்களைச்செய்து வருவதுபோல் இந்து தேசவாசிகளாகிய நம்மனோர் என் செய்தல்கூடாது? முதல் முதல் காகிதம் செய்யத்தலைப்பட்டவர்கள் பலவிதமான பழங் கந்தைத்துணிகளையும் கெட்டுப்போன காகிதங்களையுமே ஆதாரமாகக்கொண்டிருந்தார்கள். உலகத்தில் காகிதம் எவ்வளவு வேண்டியதாயிருக்கிறதோ அந்த அளவுக்கு இந்த வஸ்துக்

களைக்கொண்டு காகிதஞ்செய்வது போதாமலிருந்தபடியினால், பிற்காலத்தில் அவர்கள் பச்சை நார்களையும் பற்பல புல் பூண்டுமுதலிய வஸ்துக்களையும் தேடவேண்டியதாயிற்று. இவ்வாறு சில காலங்கழிந்த பின்னர் இந்த வஸ்துக்களும் போதாமற்போயின. ஐரோப்பாவிலும் அமெரிகாவிலும் காகிதம் செய்துவிற்கும் வியாபாரத்தை மேற்கொண்ட வர்த்தகர்கள் புல் பூண்டு மரம் முதலாகிய பற்பல தாவரவஸ்துக்களைத் தேடத்தலைப்பட்டார்கள். இதையெல்லாம் யோசித்துப்பார்க்கையில், உலகத்திலே நாகரீகமும் விவேகமும் கல்வியும் அபிவிருத்தியாய்க்கொண்டு வருந்தோறும் காகிதம் எவ்வளவு அத்தியாவசியமான பொருளாக மதிக்கப்பட்டு வருகின்றதென்பதை நாம் கரதலா மலகம் போலறிந்துகொள்ளலாம். இந்து தேசத்தவர்கள் தங்களுடையதேசத்தில் காகிதம்செய்வதற்கு உபயோகமாகத்தக்க பலவேறுமாதிரியான நார்களைத் தரத்தக்க விருட்சங்களும் செடிகளும் எங்கும் ஏராளமாயிருந்தும், காகிதம் செய்வதென்னும் பரோபகாரார்த்தமான வேலையில் எவ்வளவும் நாட்டம் வைப்பதில்லை. காகிதம் செய்வதற்கு வேண்டிய மேற்கண்டவஸ்துக்கள் இந்தியாவில் ஏராளமாய் அமைந்துகிடப்பதுபோல் உலகத்தில் வேறு எந்தத்தேசத்திலுமில்லையென்றே சொல்லலாம். சில புத்திமான்கள் இந்தியாவில் விளையும் நார்மயமான தாவரவஸ்துக்களில் பலவற்றை ஆராய்ச்சிசெய்து பார்த்ததில், சகலவிதமான காகிதங்களையும் செய்வதற்கு அதிகவிலை சரசமானதாகவும் வேலைக்குமிக்க உபயோககரமானதாகவுமுள்ள வஸ்துக்களைக் குறைவின்றி எக்காலத்தும் இந்தியாதேசத்தில் தான் அடையக்கூடுமென்று தீர்மானித்தார்கள். காகிதம் செய்வதற்கு மிகவும் உபயோகமாகும் நார்களைத் தரத்தக்க செடிகளுக்குள்ளே இந்தியாதேசத்திலேயே உற்பத்தியாகும் முக்கியமான சிலவற்றை அடியில் காட்டுகிறோம்:—

பண்டை, துத்தி, நார், காசினி அல்லது புளிச்சை, சணல்நார், கெஞ்ஜாச்செடி, தென்னைமட்டை, பனைமட்டை, ஈச்சஞ்செடி, கமுகமரம்; தாழஞ்செடி, அன்னுசிச்செடி, சாதாரணவாழைமரம், மருள், கற்றாழை, பற்பல மூங்கில்கள், பிரம்புகள், கருப்பஞ்செத்தை, அராரூட்டு, மஞ்சள், இஞ்சி, ஆகிய இவற்றின் தண்டுகள், இலைகள், வைக்கோல், பற்பல புல் பூண்டுமுதலியவை.

இந்தத் தேசத்தில் அநேக இடங்களிலே கருப்பஞ் செத்தைகளும் வாழை மட்டை முதலியவைகளும் ஏராளமாயிருக்கின்றன. அவைகளெல்லாம் பயனின்றி அழுகிப்போகின்றன, அல்லது எரிகரும்பாய்ச் சுட்டெரிக்கப்பட்டு வருகின்றன, அல்லது நிலத்துக்கு எருவாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் நமக்கு வேண்டியவற்றைக் காகிதம் செய்வதற்காக உபயோகித்துக் கொண்டும், மிகுந்ததை ஐரோப்பாவுக்கு ஏற்று மதிசெய்தும் நம்மனோர் பயனடையலாமே! இந்தப்படி அளவிறந்த வஸ்துக்கள் இமயமலைமுதல் சே

துபரியந்தமிருந்தும் நாம் அவற்றைத் தகுந்தபடி உபயோகிக்கத் தெரிந்துகொள்ளாதபடியினால் அவை வீணாய் மண்ணுக்கிரையாகின்றன. பூதபௌதிகசாஸ்திரங்களில் நன்றாய்க் கல்விபயின்றும், கூடியமட்டில் செல்வப் புதல்வர்களாயுமிருக்கப்பெற்ற இந்துக்கள் உத்தியோகம் என்னும் சேவகத்தை ஒருபொருளெனமதியாது காகிதயந்திரசாலை வைப்பது முதலிய ஸ்வயேச்சையான வாழ்க்கையையே விரும்புவாராக. காகிதம் செய்வதற்கு அத்தியாவசியமாக வேண்டிய அரும்பொருள்களில் மிகவும் வறியவர்களேயாயினும் இங்கிலாந்துதேசத்தவர்கள் அதிக பிரயாசைப்பட்டு மிக்க பொருள்விரயஞ்செய்து அப்படிப்பட்ட வஸ்துக்களை இந்தியாவிலிருந்தும் வேறே பிரதேசங்களிலிருந்தும் அயர்விலா ஊக்கத்துடன் தேடிக்கொண்டுபோய் திவ்வியமான காகித வகைகளை உண்டாக்கி இந்துதேசவாசிகளாகிய நமக்கும் ஏனைய தேசத்தவர்களுக்கும் கொடுத்துக் கொண்டு வருகின்றார்களல்லவா? அதனால் அவர்கள் எவ்வளவு பயனடைகிறார்கள்! மேற்படி வஸ்துக்கள் யாவும் நம்முடையதேசத்திலே இயற்கையில் உற்பத்தியாகத்தக்கவைகளாகவும், நாம் எவ்வளவும் மெய்வருந்தாமலே அதிக சொற்ப விலைக்கு இருந்த இடத்திலிருந்தே அடையத் தக்கவைகளாகவுமிருந்தும் நாம் "பிழைப்பில்லை, பிழைப்பில்லை, என்செய்வோம், என்செய்வோம்." என்று சொல்லித்திரிவது தகுமா? சென்னையில் பச்சையப்பமுதலியாருடைய கல்விச்சாலையில் கல்விபயின்றுவரும் வித்தியார்த்திகளைநோக்கி ஆர்பத்னட் ஹவுஸைச்சேர்ந்த கனம்பொருந்திய ஏ-மகென்ஜி என்னும் துரையவர்கள் செய்த உபந்நியாசத்தில் அவர் அடியில் வருமாறு கூறுகிறார்:—

“ காகிதம் என்னும் ஒருவர்த்தகத்துக்காகமாத்திரம் இந்தியாதேசமானது ஐரோப்பாகாண்டத்துக்கு வருஷந்தோறும்சற்றேறக்குறைய ஐம்பது லட்சம் ரூபாய்செலுத்துகிறது. அந்தத்தொகையில் ஒவ்வொருரூபாயையும் இந்துக்கள் இந்தியாவிலேயே வைத்திருக்கவேண்டும். இந்தியாதேசத்துக்கு எவ்வளவுகாகிதம் வேண்டியதாயிருக்கிறதோ அதற்கு அதிகமாய் அதைச்செய்வதற்கேற்ற வஸ்துக்கள் உங்களுடைய காடுகளிலும், புலங்களிலும், தெருப்பக்கங்களிலும் அழுகி வீணாய்க் கெட்டுப்போகின்றன. இந்து தேசவாசிகள் அக்காகிதத்தைப் பிறரிடத்திலிருந்து வாங்குவதைவிடுத்துத் தாங்கள் பிறருக்கு அதனை விற்பனை செய்யவேண்டியது. நான் இப்போது உங்களுக்கெடுத்துச் சொல்லக்கூடிய இதுபோன்ற மற்றும் அநேக வஸ்துக்களிருக்கின்றன, அவற்றையெல்லாம் இங்குவிவரித்துரைக்க எனக்கு இப்போது நேரமுமில்லை, இது தகுந்த சமயமும் அன்று.”

PRINTED AT THE ALBINION PRESS,—MADRAS.